
எங்களின் அறிவில்
எங்களின் திறனில்
தங்கி நிற்போம் நாங்கள்
எங்களின் நிலத்தில்
எங்களின் விதைப்பில்
விளைவித்தே வாழ்வோம்
கட்டுப்படுத்தும் வாழ்க்கை
முறைகளை
நீக்கி எழுந்திடுவோம்
சூழலிலிணைந்துவாழும்வழிகளை
மீளவும் ஆக்கிடுவோம்.

சி.ஜெயசங்கர்




மடல் - III தை,2023 ***உலகங்கள் தழுவிய உள்ளூர்களின் செய்திகளுக்கான மடல்***

மடல் உருவாக்க பரிமாற்ற குழாம்


*சி.ஜெயசங்கர்*
*து.கௌரீஸ்வரன்*
*இரா.சுலக்ஷனா*
*ச.மகிழினி*
*அ.அ.ஆன் நிவேதிகா*

**அஞ்சல்**

**23/1,**
**நெசவுநிலையவீதி**
**மஞ்சந்தொடுவாய்,**
**மட்டகளப்பு.**

**அன்பளிப்பு 100/=**

thirdeyeseithie@gmail.com



# மறுமதிப்பீடுகளுடன் மாண்புசெய்யப்பட வேண்டிய சுத்திகரிப்புச் சேவைத்துறை

## சுத்திகரிப்புச்சேவைத் துறையின் மேம்படுத்துகைக்கான ஓர் முன்மொழிவு



இன்று இந்த உலகத்தில் வாழுகின்ற மனிதர்களாகிய நாம் கொரொனா வைரசின் ஆட்கொல்லும் அபாயத்துக்குள் அகப்பட்டுக் கொண்டு அந்த ஆபத்திலிருந்து எம்மை விடுவித்துக் கொள்வதற்கான போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றோம். இந்தச்சூழலில் மனிதன் கண்டுபிடித்த இராணுவ வல்லமையைக் காட்டும் ஆயுதங்கள் எவற்றாலும் மனித உயிர்களுக்குப் பாதுகாப்பு வழங்க முடியாது என்பது நிரூபிக்கப்பட்டு விட்டது. அதிநவீன புலனாய்வு நடவடிக்கைகளாலும் கொரொனா வைரசின் பரவலைத் தடுக்க முடியாது போய்விட்டது.

இப்பின்னணியில் உலகத்தின் பாதுகாப்பு, உலகில் வாழும் மனிதர்களின் பாதுகாப்பு மருத்துவம், சுகாதாரம், சுத்திகரிப்பு எனும் மூன்று முக்கிய விடயங்களிலேயே தங்கியுள்ளது என்பது உணரப்பட்டு வருகின்றது. கொரொனா வைரசின் தாக்குதலிலிருந்து மனிதர் தம்மைப் பாதுகாப்பதற்கான ஒரே வழி சுத்தமாக இருத்தலும், மருத்துவர்கள் வலியுறுத்தும் சுகாதார ஆலோசனைகளைச் சரிவரக் கடைப்பிடித்தலுமே என்பது வலியுறுத்தப்பட்டு வருகின்றது.

ஆட்கொல்லி வைரசுக்கு எதிராகத் தமது உயிரையே பணயம் வைத்து இவ்வனர்த்தத்திற்கு எதிராகப் போராடி வரும் மருத்துவர்கள், தாதியர்கள், மருத்துவப்பணியாளர்கள் மாண்புக்கும் மரியாதைக்கும் உரியவர்களாகக் காட்சி

தருகின்றார்கள். இரவு பகலாக மனித உயிர்களைக் காத்துக் கொள்வதற்காக அயராது பணியாற்றும் மருத்துவத்துறை சார்ந்த மனிதர்கள் மீது அளவுகடந்த பேரன்பு ஊற்றெடுக்கின்றது.

மருத்துவத்துறையினரோடு நாம் மாண்பு செய்ய வேண்டிய மற்றொரு பணியாளர்கள் நம்மத்தியில் வாழ்ந்து வருகின்றார்கள் அவர்கள் யாரெனில் சுத்திகரிப்புப் பணியில் ஈடுபட்டு வரும் தொழிலாளர்கள் ஆவர்.

நாளாந்தம் நாம் வாழும் சூழலைச் சுத்தம் செய்வதில் இவர்களுடைய இயக்கம் மிகவும் இன்றியமையாததாக இருந்து வருகின்றது. இம்மனிதர்களின் சமூக பண்பாட்டு பொருளாதார வாழ்நிலை குறித்துக் கவனஞ்செலுத்தி இத்தகைய மனிதர்களின் நலனோம்பு நடவடிக்கைகளில் நாம் அக்கறை செலுத்த வேண்டியது தேவையாகி நிற்கின்றது.

அதாவது இவர்கள் கடமையில் ஈடுபடும்போது அணிந்து கொள்ள வேண்டிய பாதுகாப்பான ஆடை, அங்கிகள் தொடர்பாகவும் அவற்றை வடிவமைத்துப் பெற்றுக்கொடுத்தல் பற்றியும் இவர்களுக்கான வாழ்வாதார வசதிகளைத் தேவையான அளவு கிடைக்கச் செய்தல் என்பவற்றிலும் அதிக கவனஞ்செலுத்த வேண்டியதுடன் இச்சேவையாளர்கள் பற்றிய சமூகப்பண்பாட்டு மதிப்பீடுகளை மறுபரிசீலனைக்கு உட்படுத்த வேண்டியதும் அவசியமாகியுள்ளது.

மருத்துவத்துறையினோடு சம்பந்தப்பட்ட துறையாக, சுத்திகரிப்புத் தொழில் உள்ள போதும், அத்துறை சார்ந்த சமூகப்பார்வை வேறுவிதமாகவே இருந்து வருகின்றது. இன்றைய பேரனர்த்தம் மருத்துவம் சுகாதாரம், சுத்திகரிப்பு எனும் நேர்கோட்டில் வரும் ஓர் அத்தியாவசிய சேவையாக அத்துறையினரின் முக்கியத்துவத்தை நமக்கு இடித்துரைத்து நிற்கின்றது.

எனவே மனித குலத்தின் பாதுகாப்பான எதிர்கால வாழ்வியலுக்கான அடிப்படைச் சேவைகளைச் செய்து வரும் சுத்திகரிப்புத்துறையினர் குறித்தும், அச்சேவையில் பணியாற்றும் மனிதர்கள் பற்றியும் அவர்களின் பொருளாதார மேம்பாடுகள் சம்பந்தமாகவும் அதீத அக்கறை செலுத்தி அத்துறை குறித்த சமூக பண்பாட்டு ரீதியிலான மறுமதிப்பீடுகளை மேற்கொண்டு அவற்றை ஆக்கபூர்வமான முறைமைகளில் நடைமுறைக்குக் கொண்டுவருவோம்.

**சி.ஜெயசங்கர்**
**து.கௌரீஸ்வரன்**



# வவுனியா மாவட்டத்தில் ஆற்றுகை நிலையில் காணப்படும் காமன் கூத்து நிகழ்த்துகை



ஆரம்ப காலங்களில் விளாங்குளம் என அழைக்கப்பட்ட வவுனியா மாவட்டம் பல்லின கலாசார மக்களை தன்னகத்தே கொண்டு பல கலைகளையும் பண்பாடுகளையும் ஒழுக்க நெறிகளையும் விழுமியங்களையும் சுமந்து கலைகள் சங்கமிக்கும் பூமியாக அமைந்திருப்பது அதன் சிறப்பியல்புகளை எமக்கு எடுத்துக்காட்டுகின்றது.

அந்த வகையில் எமது மலையக மக்களின் பாரம்பரிய காமன் கூத்து என அழைக்கப்படும் காமன் பண்டிகை சடங்கு மலையகத்தில் மட்டும் அல்ல, வவுனியா மண்ணில் வாழ்ந்து வரும் மலையக மக்கள், சிதம்பரபுரம் என்னும் கிராமத்தில் பல சமூக மக்கள் ஒன்றிணைய இப்பண்டிகையை வெகுவிமர்சையாக பிள்ளையார் கோவில் முன்றலில் பங்குனி மாதம் நான்காம் பிறையில் கம்பம் ஊன்றி ஆற்றுகை செய்து வருகின்றனர்.

இக்காமன் பண்டிகை காமனுக்கும் சிவனுக்கும் இடையில் நடைபெறும் முரண்பாட்டின் வெளிப்பாட்டின் சடங்கு முறையாக செய்யப்படுகின்றது. மன்மதன் ரதி காதல் கொண்டு திருமணம் செய்து குறுகிய காலத்துக்குள் இந்திரன் தனது தந்திரத்தால் மன்மதனை தூரை கொண்டு சிவபெருமானுக்கு எதிராக அவரின் தவத்தை குழப்பும் நோக்கில் காமன் மலர்கனை தொடுக்க, சிவன் கோபம் கொண்டு இருவருக்கும் இடையில் போர் தொடுத்து இறுதியில் சிவன் தன் மகளின் கணவன் என்று பாராமல் தனது நெற்றி கண்ணால் எறித்து சாம்பலாக்கினார்.

விதவை கோலத்துடன் ரதி மடிப்பிச்சை கேட்டு சிவனிடம் தன் கணவனை உயிர்ப்பிக்குமாறு வேண்டி மூன்று நாட்களின் பின் உயிர்ப்பித்து அவளின் கண்களுக்கு மாத்திரம் புலப்படும் வகையில் வரம் கொடுக்கிறார். இது ஒரு சடங்கு சார்ந்த ஆற்றுகையாக செய்யப்படுகிறது.

இந்த பண்டிகை ஏன் அக்கிராமத்தில் செய்யப்படுகிறது. அதற்கான காரணம் என்ன இதன் இன்றைய தேவை என பல கேள்விகள் எழுகின்றன. 20 ஆண்டுகளுக்கு மேலாக இடம்பெயர்ந்து இக்கிராமத்தில் வாழ்ந்து வரும் மக்கள் தமது பாரம்பரிய சடங்கை தமது பிள்ளைகளுக்கும் அடுத்த தலைமுறையினருக்கும் கற்றுக்கொடுக்கும் நோக்கிலும் நம்பிக்கை அடிப்படையிலும் எடுத்த முயற்சிகள் தோல்வியில் முடிந்தன. இதற்கு முதல் காரணம் காமன் கூத்து செய்ய வேண்டும் என்றால் காமன் கூத்து பாரம்பரியமாக செய்யும் இடத்திலிருந்து பிடிமண் கொண்டு வந்து முறையாக வைப்பதற்கு குருசாமி என்பர் இல்லாமையாலும் பொருளாதார பிரச்சினைகளாலும் காமன்கூத்து ஆற்றுகை செய்ய தடைகள் காணப்பட்டன.

ஆனால் இவை எல்லாவற்றையும் கடந்து கிளிநொச்சி தேராங்கண்டலில் வசிக்கும் குருசாமியை தெரிவு செய்து ஊர் மக்கள் அனைவரும் ஒற்றுமையுடன் குழுவாக இணைந்து ஆலோசித்து பொது இடம் ஒன்றில் உள்ள பிள்ளையார் கோவிலில் கம்பம் வைத்து பயபக்தியுடன் வழிபடுகின்றனர். இக்கூத்தினை கந்தசாமி என்னும் குருசாமியே தலைமைதாங்கி ஏழு வருட காலமாக ஆற்றுகையாக முன்னெடுத்து வருகின்றார். இதில் இளம் தலைமுறையினரே பாத்திரம் ஏற்று நடிப்பதுடன், மருவிப்போகும் தமது கலையை பழக்க தேராங்கண்டலில் வசிக்கும் குருசாமியை வரவழைத்து கலைஞர்களை ஒன்றிணைத்து கோவிலில் பூசை செய்த பின் கூத்தினை பழக்கி முடிய அவருக்கான சிறுதொகை பணத்தை வழங்கி தாம் வாழும் சமூகத்தில் தமது பாரம்பரிய கலையை வளர்த்து வருகின்றனர்.

பின்தங்கிய நிலையில் வாழும் இவ் மக்கள் கூலி வேலை செய்து தமது அன்றாட வாழ்க்கையை கழிக்கின்றனர். இவ்வாறு வாழும் மக்கள் இப்பண்டிகையை எவ்வித வசதிகளும் இல்லாத போதிலும் இருக்கும் பொருளாதாரத்தை கொண்டு பயபக்தியுடன் முன்னெடுத்து வருகின்றனர்.

இந்த பண்டிகை ஆரம்பிப்பதற்கு முன்னர் மார்கழி மாதத்திலே மக்கள் தலைமை தாங்கும் குருவிடம் சென்று காமன் கூத்தினை இடை நிறுத்தாமல் நாம் தொடர்ந்து செய்ய வேண்டும். இதனால் நோய்தீரும், நேர்த்திக்கடன் நிறைவேறும், தாம் நினைத்த காரியம் நடைபெறும் என்பது மக்களின் அசையாத நம்பிக்கையாக இருப்பதன் காரணமாக பல தடைகளை தாண்டி ஊர் ஊராக சென்று மக்களிடம் காணிக்கை சேர்த்து அதில் வரும் பணத்தை கொண்டு ஆற்றுகை செய்கின்றனர்.



16 நாட்கள் விரதம் இருந்து காப்பு கட்டி தூய்மையுடன் பங்குனி நான்காம் திகதி கம்பம் ஊன்றி ஒவ்வொரு நாளும் இரவு ஏழு மணிக்கு குருசாமி பூசை செய்து பொங்கல் பொங்கி மடைவைத்து பின் மன்மதன் ரதியின் சிறு ஆட்டம் வேட உடை ஒப்பனையுடன் தொடங்கி பத்து மணிவரை நடைபெறும். இதில் பாடலை பாடிக்கொண்டு தப்பு வாசிப்பார்கள் ஆண், பெண் இருபாலாரும் இணைந்து பாடலை பாடி சல்லாரி, தப்பு, போன்ற இசைக்கருவிகளை இசைத்து பாட ஆற்றுகையாளர்கள் ஆடுவார்கள்.

இதில் பாத்திரம் ஏற்று ஆடும் ஆற்றுகையாளர் மூன்று வருடங்கள் தொடர்ந்து ஆடவேண்டும். இக்காலம் பனிக்காலம் என்பதால் தப்பின் சத்தம் குறைவாக இருப்பதால் கோவிலுக்கு முன்னால் தீ மூட்டி ஒரு கட்டம் ஆடி முடிந்ததும் தப்பினை சூடு செய்யும் போது நடிகர்கள் ஓய்வு எடுப்பார்கள்..

இங்கு ஆடும் கலைஞர்களுக்கு சாமி உரு கொள்வதால் இடுப்பில் பட்டி கட்டி பின்னால் ஒருவர் பிடித்திருப்பார். உரு வரும் போது ஆவேசம் கொண்டு வேகமாக ஆடுவதால் இதனை கட்டுப்படுத்த பயன்படுத்துவார்கள். பின் குருசாமி திருநீறு பூசி அமைதிப்படுத்துவார். வாய் பேச முடியாத தெய்வமாகவும் காவல் தெய்வமாகவும் இருப்பதால். மக்கள் இதனை பயபக்தியுடன் நிகழ்த்துகின்றனர். இவ்ஆற்றுகையின் போது சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை இரவு தொடக்கம் மறுநாள் அதிகாலை வரைக்கும் பார்வையிடுகின்றனர். திறந்த வெளியில் எவ்வித கட்டுப்பாடும் இன்றி அனைவரும் கூட்டாக செயற்படுகின்றனர்.

இக்கூத்தில் ஆரம்ப காலப்பகுதியில் 32 பாத்திரங்களும் பின் 16 பாத்திரங்கள் கொண்டும் ஆற்றுகை செய்யப்பட்டுவருகிறது.


இறுதி நாள் கோயில் வெளியின் இரு சந்தியிலிருந்தும் பாத்திரங்கள் வருகை தரும். உதாரணம் வீரபத்திரர், சிவன், ரதி, மன்மதன் போன்ற பாத்திரங்கள் சிறப்பாக அமைந்திருக்கும். போர் காட்சிகள் கம்பத்திற்கு மேலே கம்பிகள் இணைத்து சீர்வானம் விட்டு பிரமாண்டமாக காணப்படும். கம்பம் எறியும் போது நினைத்த காரியம் நிறைவேறும் என்பது மக்களின் நம்பிக்கையாக இருப்பதால் உப்பு வீசுவார்கள்.

நிகழ்த்துகை முடிந்த பின் மூன்றாம் நாள் காமனை உயிர்ப்பிக்கும் காட்சி நடைபெறும். அத்துடன் இருவர் கோமாளி வேடம் பூண்டு மக்கள் மத்தியில் சென்று நையாண்டி செய்து மகிழ்விப்பதாகவும் ஆற்றுகையாளருடன் இணைந்து கோமாளித்தனமாக செயற்படுவார்கள். இப் பண்டிகையை எவ்வித வேறுபாடும் இன்றி அனைவரும் ஒற்றுமையாக நிகழ்த்தி வருகின்றனர். ஆகவே எமது தமிழர்களின் பாரம்பரிய கலைகள் அழிந்து விடாமல் எங்கோ ஓர் இடத்தில் வாழ்ந்து கொண்டு இருப்பதை காணமுடிகின்றது.

ந. கேதீஸ்வரி

வவுனியா

# வங்காள பொருளியல் பேராசிரியர் அனுமுஹமது



பேராசிரியர் அனுமுகஹமது, ஜஹாங்கிர்நகர் பல்கலைக்கழகத்தில் பொருளியல் பேராசிரியராக கடமையாற்றி வருகின்றார். இவர் 1991 ஆம் ஆண்டு தொடக்கம் 2005 ஆம் ஆண்டு வரை மானிடவியல் தொடர்பாகவும் கற்பித்து வந்துள்ளார். வருகைதரு புலமையாளராக கொலம்பியா பல்கலைக்கழகத்திலும், (அமெரிக்கா 1993) மனிடோபா பல்கலைக்கழகத்திலும் (கனடா 2001) பணியாற்றியுள்ளார். இவரின் ஆய்வு விருப்பு தளங்களாக உலகமயமாதல், சமூகநீதி மற்றும் மாற்றம், பால்நிலை, அரசசார்பற்ற நிறுவனங்கள் போன்றவை காணப்படுகின்றன.

2014 ஆம் ஆண்டு முதல் சர்போஜன்கோதா (மக்கள் குரல்) என்ற சமூக பொருளாதார பிரச்சினைகளை பேசுகின்ற வங்காள காலாண்டு இதழின் ஆசிரியராகவும், 2016 ஆம் ஆண்டு முதல் சமாஜ்பிக்கன்சமேக்கா என்ற சமூகவிஞ்ஞான இதழின் ஆசிரியராகவும் கடமையாற்றி வருகின்றார் இவர் .2017 இல் அனுபவம்வாய்ந்த நிபுணர்களால் முன்வைக்கப்பட்ட மாற்று சக்தி தொடர்பான திட்டத்தின் ஒருங்கிணைப்பாளராகவும் செயற்பட்டுள்ளார் .

இவர் அபிவிருத்தி அல்லது அழிவு (*Development or Destruction*), வங்காளத்தில் அபிவிருத்தி நெருக்கடிகளும் அரசசார்பற்ற நிறுவனங்களின் மாதிரிகளும் (Crisis of Development and the NGO Model in Bangladesh), பால்நிலை மற்றும் சமுதாயம் (Gender and Society), சமுதாயத்தின் பயமும் பொருளாதாரத்தின் வன்முறையும் (Society of Fear, Economy of Violence), உலகமயமாதலின் முரண்பாடு (Contrariety of Globalization), நாங்கள் 99% (We are 99%), கடவுள் மூலதனம் மற்றும் மக்கள் (God, Capital and People), அபிவிருத்தியின் முரண்பாடுகள் (Contrariety of Development), தலைநகரங்களின் சர்வதேசமயமாக்கலும் பெரும்பான்மை உலகமும் (Internationalization of Capital and Majority World) போன்ற நாற்பதிற்கும் மேற்பட்ட நூல்களை எழுதியுள்ளார்.

தமிழாக்கம் - இரா.சுலக்ஷனா

# நேர்காணல்

**தற்போதைய நெருக்கடிக்கு இலங்கையை வழிநடத்திய காரணிகள் எவை?**

-**அதிகாரச்செறிவு, செல்வச்செறிவு** மற்றும் அதை மேலும் எடுத்துச் செல்லும் முயற்சிகள் நெருக்கடிக்கான அடிப்படைக் காரணங்கள் ஆகும். **தவறான கொள்கைகள், எதேச்சாதிகார ஆட்சி, வளர்ச்சி பிடிவாதம், அதிக கடன் சுமை, பொதுப் பணத்தை வீணடித்தல், களவாடல்** மற்றும் **அந்நியச் செலாவணி கையிருப்பு மீதான அழுத்தம்** ஆகியவை முறையற்ற முகாமைத்துவத்தைத் தூண்டின.

இதனால், செலவு மற்றும் இலாபம் ஆகியவற்றைக் கருத்தில் கொள்ளாமல் பெரிய கடன்களுடன் மிகப்பெரிய திட்டங்களைக் உருவாக்கி மகிழ்ச்சி காண்பதில் இருந்த அக்கறையும் அதன் ஒரு பகுதியாகும் இந்த திட்டங்கள் பல்வேறு குழுக்களுக்கு பெரும் லாபத்தை வட்டியாக அள்ளிச்சொரிந்தன, இது நாட்டின் மீது சுமையாக மாறியது . தொடர்ச்சியாக விலையை அதிகரிக்கும் விலைப்பட்டியல்கள் மூலம் மூலதனப் பிரச்சினைக்கு தீர்வு காண முனைந்தமை, மற்றும் நவதாராளவாத உலகளாவிய எதேச்சதிகார எண்ணங்களும் இந்த நெருக்கடியை உருவாக்கியது. விவசாயத்தை இயற்கை விவசாயமாக மாற்றுவது ஒரு நல்ல முடிவு என்று நான் நினைக்கிறேன், ஆனால் இந்தத்தீர்மனத்தின் போது வேறு பல சிக்கல்களும் ஏற்பட்டதால் இது பிரச்சினையை உருவாக்கியது. இது நன்கு சிந்திக்கப்படாத பாதையில் அடைந்து கொள்ளப்பட வேண்டிய பாதையை நோக்கிப்பயணிப்பதாக உள்ளது.

**தற்போதைய நெருக்கடியை சமாளிக்க IMFஇன் பங்கு அவசியமானதா?**

இலங்கை இதற்கு முன்னர் பல தடவைகள் சர்வதேச நாணய நிதியத்தின் கடனைப் பெற்றுள்ளது, இது உண்மையான அபிவிருத்திக்கான பாதையை சிக்கலாக்கியது . பொதுவாக IMF ஒரு பிரச்சினையிலிருந்து மீள்வதற்கான அமைப்பல்ல இது ஒரு கடன் . வழங்கும் அமைப்பாகும், இது வெளிவாரி நிதிகளைப் பெறுவதற்கான வாய்ப்பைத் தருகின்றது .இந்த பொருளாதாரங்களின் நிதி நெருக்கடியை மறுகட்டமைப்புச் செய்வதன் மூலம் பெரும் பொருளாதாரங்களுக்கு வாய்ப்புக்களை உருவாக்குகின்றது. இது ஊழல் மற்றும் தவறான நிர்வாகம் பற்றி வெளிப்படுத்தும் சேவைகளைச் செய்கிறது. ஆனால் அவர்களின் முக்கிய கவனம் வேறுபட்டது. IMF மற்றும் அது சார்ந்த பலர் நெருக்கடியின் மூலகாரணங்களை ஆராய விரும்பவில்லை, மாறாக அவர்கள் அதன் பயனாளிகளின் பக்கத்தில் நின்று, பொது வளங்கள், சேவைகளை மேலும் தனியார் மயமாக்குதல் மற்றும் இறக்குமதியில் அதிக அதிக கவனம் செலுத்துதல், பொது சேவைகளை குறைத்தல் மற்றும் பாரிய வணிகங்களுக்கு மானியம் வழங்குது போன்றவற்றில் அதிக அக்கறை செலுத்துகின்றது.

எனவே IMF தீர்வு அல்ல, ஏனெனில் IMF (மற்றும் உலக வங்கி) பிரச்சனைகளைத் தோற்றுவிப்பவர்களாக கருதப்படுபவர்கள்.

**பொருளாதார மீட்சிக்காக, டொலர்களில் வருவாயைப் பெறுவதற்காக தொழில் வல்லுநர்கள் மற்றும் நிபுணர்கள் வேறு நாடுகளுக்கு குடியேற அனுமதிப்பது பயனுள்ளதா?**

**இது இலாபத்தை விட நட்டத்தையே உருவாக்கும்.** தொழில் வல்லுநர்கள் மற்றும் நிபுணர்களாக மாறுவதற்கு நீண்ட நேரம், முயற்சிகள், வளங்கள் மற்றும் சமூக செலவுகள் தேவை. இவர்கள் தான் பிறந்த நாட்டின் மூலதன சொத்துக்களை, ஒழுங்காக பயன்படுத்தினால், வருமானத்தை தம்நாட்டிலேயே பெருக்கும் திறன் கொண்டவர்கள். நாட்டிற்கு சேவை செய்வதற்கான உண்மையான வாய்ப்பை அவர்களுக்கு வழங்குவது குறுகிய காலத்தில் சில டொலர்களை பெருவதற்கல்ல. நீண்ட காலத்தில் அறிவு சார் மூலதனத்தின் இழப்பு என்பது பொருளாதாரத்திற்கு மிகவும் பாதிப்பை ஏற்படுத்தும். அறிவுசார் மூலதனமானது ஒரு மதிப்பு மிக்க வளமாகும்.

**உள்ளூர் வளங்கள், உள்ளூர் அறிவு சார் திறன்கள் பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு பங்களிக்கவில்லையா?**

ஆம், அது வெளிப்படையானது இறக்குமதி . செய்யப்பட்ட யோசனைகள், நுட்பங்கள் மற்றும் வளங்களை அதிக அளவில் சார்ந்து உண்மையான வளர்ச்சிப் பாதையை எந்த நாடும் கண்டுபிடிக்க முடியாது. நாடு உண்மையிலேயே ஒரு வலுவான வாக்க விரும்பினால்அடித்தளத்தை உரு, **அது உள்ளூர் அறிவுசார் மூலதனம், மற்றும் திறன்களை நம்பியிருக்க வேண்டும்.** இதன் அடிப்படையில் ஒரு நாடு உள்ளூர் வளங்களை பயன்படுத்த, மற்ற நாடுகளின் யோசனைகள், திறன்களை திறம்பட உள்வாங்கி உலக அளவில் வலுவான பங்கை வகிக்க முடியும்.

**சுற்றுலாத்துறையை இலங்கை ஏன் அதிகம் சார்ந்துள்ளது?**

எந்த ஒரு மூலத்தையும் அதிகம் சார்ந்திருப்பது எப்போதுமே ஆபத்தானது. சுற்றுலா எப்போதும் நிலையான வளர்ச்சிக்கான நிச்சயமற்ற பகுதியாகும் . பொருத்தமான தொலைநோக்கு பார்வை இல்லாதது இந்த உயர்ந்த சுற்றுலாத் துறையுடன் சார்புநிலையை உருவாக்கியது.

**நமது தற்போதைய கல்வி முறை நெருக்கடியை எவ்வாறு உருவாக்கியது? நேரான மாற்றத்திற்கு எத்தகைய கல்வி சீர்திருத்தம் தேவை?**

வலுவான நவதாராளவாத நிலை-, பல நாடுகளில் கல்வி முறைகளை மாசுபடுத்தியுள்ளது என நான் நினைக்கிறேன் . இலங்கையில் நீண்ட காலமாக தேசிய இலவச பொதுக் கல்வி முறை உள்ளது. இது நாட்டுக்கு பெரிய பலம். இந்த வலிமையை விரிவுபடுத்துவதும் தர மேம்பாட்டை உறுதி செய்வதும் தேவை.

கூட்டுறவு வலுப்பெற்ற எதேச்சதிகார செல்வாக்கிலிருந்து விடுபட்டு சுதந்திரமாக சிந்திக்கவும் செயல்படவும், பொது உரிமைகளை மேல்நிலையில் வைத்திருக்கவும் கல்விப்புலம் மிகவும் முக்கியமானது.

**முக்கிய தகவல் ஊடகங்கள், சமூக ஊடகங்கள் எந்த வகையான வகிபாகத்தைச் செலுத்த முடியும்?**

உலகெங்கிலும் உள்ள முக்கிய ஊடகங்களின் கட்டமைப்புக்கள் மிகப்பெரிய நிறுவனங்களின் ஆர்வத்துடன் உட்பொதிக்கப்பட்டவை சுதந்திரமான ஊடகவியலாளர்கள் எப்போதும் விரோதமான அடிமைச் சூழலில் பணிபுரிகின்றனர்அவர்களுக்கு இது . போராட்டம் போன்றது. உண்மையான தகவல்களைப் பெறுவதற்கான பொது உரிமைகள் எப்போதும் அச்சுறுத்தலுக்கு உள்ளாகின்றன. முக்கிய ஊடகங்கள் மீதான அழுத்தம் மற்றும் சமூக ஊடகங்களில் அதிக செல்வாக்குத் தொடர்பில் அதிக அக்கறைகொள்ளல் முக்கியமானது.

**இவ்வாறான பொருளாதார நெருக்கடிக்காலத்தில் கல்வியாளர்கள் மற்றும் கலைஞர்களின் பங்கு மற்றும் பொறுப்பு எவை? குறிப்பாக மத நிறுவனங்கள் எவ்வாறு பங்களிப்புச்செய்ய முடியும்?**


கல்வியாளர்கள், கலைஞர்கள், மற்றும் மத நிறுவனங்கள் கருத்துக்களை உருவாக்குபவர்கள். இவர்கள் சமூகத்தின் பொதுவான செய்தித்தொடர்பாளர்கள் மக்கள் இவர்களுடைய கருத்தை மதிக்கிறார்கள் எனவே, மக்கள் நலனை நிலைநிறுத்துவதற்கும், சர்வாதிகாரத்தை கேள்விகேட்பதற்கும் பொருளாதாரக் கொள்கையை மாற்றுவதற்கும், மக்கள் சக்தியை வலுப்படுத்துவதற்காக மேலாதிக்க சிந்தனைகளை எதிர்ப்பதற்கும் இவர்களுக்கு மிகப் பெரிய பொறுப்பு உள்ளது.

**நேர்கண்டவர்**- கலாநிதி. சி. ஜெயசங்கர்

**நேர்காணலில் பங்குபற்றியவர்**

பேராசிரியர் அனு முஹம்மது

**தமிழாக்கம்** பேராசிரியர் சிவானி - சண்முகதாஸ்



# கிளிவெட்டி மீனினங்களும் மீன்பிடி முறைகளும்



**இ**லங்கையில் காணப்படுகின்ற மிகப் பெரிய ஆறான மகாவலி ஆற்றில் இருந்து நீரினை பெற்று கொண்டும் கிளிவெட்டி ஆறு மிகவும் வளம் நிறைந்ததாக காணப்படுகின்றது. மகாவலி கங்கையானது பீதுருதாலகால மலையில் இருந்து ஊற்றெடுத்து திருகோணமலை கடலில் கலக்கின்றது. இதற்கு இடையில் பல்வேறு கிளைகளாக பிரிந்து காணப்படுகின்றது. இந்த வகையில் மகாவலி கங்கையின் கிளை மாவிலாற்றின் ஊடாக கிளிவெட்டி பிரதேசத்தில் அமைந்துள்ள ஆற்றுக்கு பாய்கின்றது.

இவ்ஆறானது பல வளங்களை கொண்ட நன்னீர் ஆறாக காணப்படுகின்றது. கிளிவெட்டியில் அமையப்பட்டுள்ள இவ்வாற்றில் மீனினம் வளரக்கூடிய சூழ்நிலையும் மீன்கள் உண்ண கூடிய அல்கா அதாவது பாசியினங்களும் காணப்படுகின்றன. இதனால் மீன் இனம் சிறப்பாக வளர்கின்றது. கிளிவெட்டி ஆற்றில் பல்வேறுபட்ட மீன் இனங்கள் வாழுகின்றன. இந்த வகையில் கிளிவெட்டி பிரதேச நபர்களினால் இவ்வாற்றில் காணப்படுகின்ற மீன்கள் பல்வேறு பெயர் கொண்டு அழைக்கப்படுகின்றன.

இங்கு. குறலி, விரால், சுங்கான், கொக்குச்சான், கனயான், யாவான், இரானி, உலுவ, மசரி, வால, செல்வன், பொட்டியான் , கரத்தை, வெள்ளையாபோடி, கெலுத்தி, செத்தல், காப்டன், அலகுவாயன் போன்ற மீன்கள் காணப்படுகின்றன.

இம்மீன் இனங்கள் பிரதேசங்களுக்கு ஏற்றால்போல் வேறுபட்ட பெயர் கொண்டு அழைக்கப்படும். இம்மீன் இனங்கள் இங்குள்ள கிராம வாசிகளினால் விரும்பி உண்ணப்படுகின்றன. கிராமப்புரங்களில் கர்ப்பிணிதாய்மார்களுக்கு இவ்வகை மீன்கள் அதிகளவு சமைத்து கொடுப்பார்கள். கிராமபுறங்களில் இவ்வகை ஆற்று மீன்கள் சமைக்கும் முறையே வித்தியாசமானதாக காணப்படும்.

இவ்வாறு காணப்படும் இம்மீன் இனங்கள் பல்வேறு வகையில் இங்குள்ள மீனவர்களினால் பிடிக்கப்படுகின்றது. இங்குள்ள மீனவர்கள் தூண்டிலில் மீன் பிடித்தல், வலை கட்டி பிடித்தல், அத்தாங்கினால் பிடித்தல், கரப்பு கூடையில் பிடித்தல், வாரி பிடித்தல், வரம்பு போட்டு நீரை இரைத்து பிடித்தல், ஒட்டை கட்டை போட்டு பிடித்தல், வலை வீசி பிடித்தல், இரவு நேரங்களில் மின்குழிழ்களைப் பயன்படுத்தி கத்தியால் வெட்டிப் பிடித்தல், நீரினை குழப்பி கைகளால் பிடித்தல் என பல முறைகளை பயன்படுத்தி இவ் ஆற்றில் உள்ள மீன்களை மீனவர்கள் பிடிக்கின்றார்கள்.

**தூண்டிலில் மீன் பிடித்தல்**

இம்முறையே இங்கு அதிகமாக காணப்படுகின்றது. இதில் எறி தூண்டில், இலுவை தூண்டில் என இரண்டு வகையான தூண்டில்கள் பயன்படுத்தப்படுகின்றன. எறி தூண்டில் என்பது தங்கூசி எனும் நூலில் தூண்டிலுக்கு பயன்படுத்துகின்ற வலைவான ஊசி, தெப்பை, ஈயத்துண்டு என்பன கட்டப்பட்டு ஊசியில் இரை குத்தப்பட்டு ஆற்றில் எறிந்து பிடிக்கும் முறையாகும். அடுத்ததாக இலுவை தூண்டில் என்பது நீளமான பெரிய மரத்தடியின் முனையில் தங்கூசி அல்லது சாதாரண நூல் கட்டப்பட்டு அதில் தூண்டல் ஊசி மற்றும் தெப்பை கட்டப்பட்டு அதில் இரை குத்தி ஆற்றில் போட்டு தடையை இழுத்து மீன் பிடிக்கும் முறையாக இது காணப்படுகின்றது. இவ்வாறு தூண்டிலில் மீன் பிடிக்க இங்குள்ள மீனவர்கள் கோதுமை மா, புலு, வல்லாரைக்கீரை, சிறிய மீன் வகை போன்றவற்றை இரைகளாக பயன்படுத்துகின்றனர்.

**வலைகட்டி பிடித்தல்**

வலை என்பது நூலினால் பின்னப்பட்டிருக்கும். அதில் மிதப்பு மற்றும் மெல்லிய கயிறு கட்டப்பட்டு காணப்படும். சிறிய மீன் பிடித்தல் மற்றும் பெரிய மீன் பிடித்தல் என மீன்களுக்கு ஏற்றால்போல் வலைகளும் மாற்றம் அடைந்து காணப்படும்.

வலையினை ஆற்றிற்கு குறுக்காகவோ அல்லது ஆற்றிற்கு ஓரமாகவோ கட்டி மீனினை பிடிப்பார்கள். இவ் வலையினை மீனவர்கள் இரவுப்பொழுதில் கட்டி அதனை விடியப்பொழுதில் கழட்டுவதை இங்கு வழக்கமாக கொண்டு உள்ளனர். இதனை தவிர்ந்து பகல் வேலைகளில் அதிகமாக மீன்கள் திரியும் இடத்தினை பார்த்து அதனை சுற்றி வலையினை கட்டி நீரினை கலக்கி மீனினை இவ்வலைகட்டும் முறையின் ஊடாக பிடிக்கின்றனர்.

**அத்தாங்கினால் மீன் பிடித்தல்.**

கிளிவெட்டி ஆற்றில் மீன்பிடிப்பவர்களில் அதிகமாக அத்தாங்கினையே பயன்படுத்துகின்றனர். அத்தாங்கு என்பது வலையக்கூடிய மரதடியினை வலைத்து வாய்ப்பகுதி அகன்றதாக கட்டி அதன் கீழ் வலையினை கீழ் பகுதி ஒடுங்கிய வண்ணம் கட்டியிருப்பார்கள். இதனைக் கொண்டு ஆற்றில் மீன் தெரியும் போது விரைவாக அதனை நீரிற்குள் தாழ்த்தி மீனினை அத்தாங்குக்குள் செல்ல வைத்து பிடிப்பார்கள். இம்மீன் பிடிக்கும் முறையானது ஆற்றில் நீர் குறைவடையும் போது அதிகமாக பயன்படுத்தப்படுகின்றது.



**வலை வீசி மீன் பிடித்தல்.**

இதற்கென்று வலை தயாரிக்கப்படுகின்றது. அதாவது நூலினாலான வலை இவர்களினாலும் பிண்ணப்படுகின்றது. கடைகளில் பிண்ணி வைக்கப்பட்டு உள்ள வலைகளும் வாங்கி எடுக்கின்றனர். இவ்வலையானது அடிப்பக்கம் நன்றாக விரிந்ததாகவும் மேல் பக்கம் நன்றாக ஒடுங்கியதாகவும் அமையப்பட்டுள்ளது. இவ்வலையின் அடிப்பகுதியில் ஈயங்கள் கட்டப்பட்டிருக்கும். ஆற்றில் மீன்பிடிக்கச் செல்வதற்காக பயன்படுத்துகின்ற தோனியிலோ அல்லது ரியுப்புக்களில் காத்து நிரப்பி அதன் மீது அமர்ந்து கொண்டு தண்ணீர் கூடிய நேரங்களில் மீன்கள் அதிகமாக தென்படும் இடங்களில் வலை வீசி மீன்களை தம் வீசும் வலைக்குள் அகப்பட வைத்து மீனினைப் பிடிக்கின்றனர். நீர் குறைவாக காணப்படும் போது நடந்து சென்று வீசி பிடிப்பார்கள். இம்முறையானது பெரும்பாலும் எல்லா பிரதேச மீனவர்களினாலும் முன்னெடுக்கும் முறையாக காணப்படுகின்றது.



**கரப்புக் கூடை மின்பிடி.**

கரப்பை பயன்படுத்தி மீன் பிடிப்பது பழமையான மீன்பிடி முறையாக இங்கு காணப்படுகின்றது. இக்கரப்பு ஆனது அடிப்பகுதி விரிந்ததாகவும் மேல்பகுதி ஒடுங்கியதாகவும் காணப்படும். இதனை பிரம்பினைப் பயன்படுத்தி பின்னுவார்கள். இரண்டு பக்கங்களும் திறந்தவாறே காணப்படும். ஆற்றில் மீனினை கண்டவுடன் விரைவாக ஓடிச்சென்று அகன்ற பகுதியால் மீனினை அதற்குள் சிக்குமாறு கூடையை வைத்து விடுவார்கள். அதன் பிற்பாடு மேல் பக்கம் உள்ள சிறிய வாய்ப்பகுதியினால் கைகளை உள் விட்டு மீனினை பிடித்து வெளியில் எடுப்பார்கள். இம்முறை பழங்காலம் தொட்டு இங்கு பழக்கத்தில் காணப்படுகின்றது.

**வாரி மீன் பிடித்தல்.**

நீள் வடிவத்தில் காணப்படும் வலையினை பயன்படுத்தி இம் மீன்பிடி மேற்கொள்ளப்படுகின்றது. இரண்டு பேர் வலையின் இரண்டு தொங்களிலும் பிடித்து இருப்பார்கள். ஒரு கையினால் நீருக்குள் வலையை இழுப்பார். மறு கையினால் நீருக்குள் மேற்புறமாக வலையினை இழுப்பார்கள் இவ்வாறு இரண்டு பேரும் ஒரே நேரத்தில் இழுத்து அவர்களின் வலைக்குள் மீனினை சிக்க வைத்து மீனினை பிடித்து கொள்ளுவார்கள். இம் முறையின் ஊடாக அதிக மீனினை பிடிக்க கூடியதாக உள்ளது.

**வரம்பு போட்டு நீரினை இரைத்து மீன் பிடித்தல்.**

இம்முறையானது ஆற்றில் நீர் குறையும் போதே சாத்தியமாகின்றது. ஆற்றில் நீர் நன்றாக குறையும் போது ஆற்றில் உள்ள பள்ளங்களில் நீர் தேங்கி நிற்கும். அப்போது மீன் வெளியில் செல்லாமல் அங்குள்ள களிகளால் நான்கு பங்கங்களுக்கும் வரம்பு அமைக்கப்பட்டு இருக்கும். அமைக்கப்பட்ட பகுதியில் உள்ள நீர் இரைக்கப்பட்டு அதற்குள் இருக்கும் மீனினைப் பிடிக்கும் முறையாக காணப்படுகின்றது.

**ஓட்டை கட்டை போட்டு மீன் பிடித்தல்.**

இம்முறையும் இங்கு அதிகமாக காணப்படுகின்றது. ஆற்றுநீர் ஓடும் வேகம் குறைந்த இடங்களில் பட்ட மரத்தில் காணப்படுகின்ற துளைகள் நிரைந்த ஓட்டை கட்டைகள் வெட்டப்பட்டு நீர் ஓட்டம் குறைவான இடங்களில் போடப்படுகின்றது. இவ்வாறு போடுவதனால் மீன்கள் அதற்குள் நுழைந்து தமது வாழ்விடத்தை அமைத்து கொள்ளுகின்றது. அவ்வாறு மீன்கள் உள்நுழைந்ததும் ஆற்றிற்கு வெளியில் ஓட்டை கட்டைகள் எடுக்கும் போது உள்நுழைந்த மீன்கள் மாட்டிகொள்கின்றன.

**இரவு நேரங்களில் மின்குமிழ்களைப் பயன்படுத்தி கத்தியால் வெட்டி பிடித்தல்**

இம் முறை மீன்பிடியானது கிளிவெட்டி ஆற்றில் நீர் குறைந்த காலப்பகுதியில் அல்லது நீர் உள்ள காலப்பகுதியில் ஆற்றின் கரைப்பகுதியில் மேற்கொள்ளப்படுகின்றது. இரவு வேளைகளில் நன்றாக ஒளிருகின்ற மின்குமிழ்களை நீரிற்குள் ஒளிர விடப்படும் போது அதில் தென்படுகின்ற மீன்களை கத்தியினாலையோ அல்லது வால் பயன்படுத்தியோ அல்லது இரும்பு பட்டங்கள் பயன்படுத்தியோ மீனினை வெட்டி அல்லது குத்தி பிடிக்கின்றனர் இம்மீன்பிடி நிலவு ஒளிரும் காலப்பகுதியில் இடம்பெறுவதில்லை.

**நீரினை குழப்பி கைகளால் பிடித்தல்.**

இம் முறையானது ஆற்றில் நீர் குறையும் போது மட்டுமே சாத்தியப்படுகின்றது. காரணம் நீரோட்டம் இல்லாது இருக்கும் போது தான் இம்முறை வெற்றி அளிக்கின்றது. பகல்பொழுதுகளில் நன்றாக வெயில் எரிக்கும் போது ஆற்றில் நீர்குறைந்து நீரோட்டம் இல்லாது இருக்கும் இடங்களில் நீர் ஓடாமல் தடைபோட்டு அங்குள்ள நீரின் அடியில் இருக்கும் சுரியினை கிளரி விடுவதன் ஊடாக நன்றாக நீரின் நிறத்தை மாற்றி சேற்று நிறத்திற்கு மாற்றி விடுவார்கள். இதனால் நீரிற்கு அடியில் மீன்களால் சுவாசிக்க முடியாமல் நீரிற்கு மேல் பகுதிக்கு சுவாசிப்பதற்காக வரும் அப்போது மீனவர்கள் கைகளால் மீனினைப் பிடித்துக் கொள்ளுவார்கள்.

மேற்கூறப்பட்ட முறைகளில் கிளிவெட்டி ஆற்றில் மீன்பிடி செய்யப்படுகின்றது. இம் முறையில் சில, வேறு பிரதேசங்களில் செய்யலாம். ஆனால் இவற்றில் பல முறைகள் கிளிவெட்டி பிரதேசத்திற்கே உரித்தானதாக காணப்படுகின்றது. இவை பல பரம்பரை பரம்பரையாக கடத்தப்பட்டு வருகின்றது. இம் முறைகளை பயன்படுத்தி மீன்பிடிப்பதன் ஊடாக அதிக இலாபம் ஈட்ட முடியாது எனினும் பரம்பரையாக பின்பற்றி வரும் செயற்பாடுகளை விடக்கூடாது என்பதற்காக இன்னும் பின்பற்றி வருகின்றனர்.

**சி.டனுசியா**

**கிளிவெட்டி**

# சமகால வாழ்வில் மருத்துவிச்சி முறையினை மீளளித்தல்.



மனித வாழ்வியல் நம்பிக்கை, சடங்குகள், நிகழ்த்துகலைகள், மருத்துவம் போன்ற பண்பாட்டு நிகழ்த்துதல்களால் உயிர்ப்புடன் இயங்கிவருகின்றது. மனித இயக்கத்தில் பண்பாட்டு மரபுகளின் வகிபங்கு என்பது முக்கியமானது. மனிதர்கள் வாழ்தலிருந்து கண்டுபிடித்த அறிவுமரபுகளின் தொகுப்பாக இவை உள்ளன. ஒவ்வொரு பண்பாட்டு நடத்தைகளும் மனிதர் சேர்ந்து இயங்குவதன் வழி முழுமை அடைகின்றது. தனக்குரிய பண்பாட்டு அறிவு மரபுகளுடன் இணைந்து இயங்குவதன் வழி சமூகம் பாரம்பரிய அறிவுமுறைகளை சேமிக்கிறது, கடத்துகிறது, பாதுகாக்கிறது.

இத்தகைய சமூகச்செயற்பாட்டில் பண்பாட்டு முழுமையில் ஏற்படுத்தப்படும் அதிகார அழுத்தங்களும் மாற்றங்களும் பண்பாட்டு நடத்தையிலும் மனித வாழ்வியலிலும் தாக்கத்தினையும் மாற்றத்தினையும் ஏற்படுத்துகின்றது. காலனியம் அறிமுகப்படுத்திய நவீனம் பாரம்பரியத்தினை பாமர மக்களுடையதாய் வாழ்வியலுக்கு ஏற்பற்றதாய் பொதுத் தளத்திலும் ஆய்வுப்புலத்திலும் பரப்புரை செய்தது. தர்க்க ரீதியான விமர்சனங்கள் அற்றதாய் நிறுவப்பட்ட உண்மையாய் இத்தகைய காலனியக் கருத்தியல்கள் நவீனமாதல் என ஏற்றுக்கொள்ளப்பட்டன

பலதசாப்த அனுபவ அறிவின் வழி உலகம் தழுவிய பன்மைத்தன்மை கொண்டு இயங்கிவரும் பாரம்பரிய அறிவியல் முறைகளை வாழ்வியலுக்கு உகந்தவை அல்லாதவைகளாக காலனிய மதிப்பீடு மற்றும் பெறுமானங்கள் நிறுவின. இதற்கான ஊடகமாக நவீன கல்வி முறையியல் செயற்பட்டு வருகின்றது.
வேளாண்மை. மருத்துவம், சட்டம், நீதி, பொருளாதாரம், நிகழ்த்துகலைகள் போன்ற பல உள்ளூர் அறிவு மரபுகள் வாழ்வியலிருந்து அகற்றப்பட்டன. இத்தகைய திட்டமிடப்பட்ட அழிப்பினால் முற்றாக வாழ்வியலிருந்து நீங்கிய அறிவு மரபாக மருத்துவிச்சி மரபு காணப்படுகின்றது. இன்றைய சூழலில் மருத்துவிச்சி மரபு என்பது வீடுகளில் பார்க்கமுடியாத வாழ்வியலில் பயன்படுத்த தகுதியற்றதாகவும்; தகுந்த மருத்துவ முறையாக வாழ்வியலுக்கு ஏற்றதாய் உண்மைத்தன்மை வாய்ந்ததாய் காலனிய நவீன மருத்துவ முறை அறிமுகம் செய்யப்பட்டது. இவற்றிக்கு மாற்றாய் இன்றைய காலனிய நீக்கச்செயற்பாட்டில் உள்ளூர் அறிவுமுறைகள் பற்றிய தேடலும் வாசிப்பும் சமூகத்துடன் இணைந்த மீளுருவாக்கச் செயற்பாடும் முக்கியமாய் உணரப்பட்டு முன்னெடுக்கப்படும் சூழலை அவதானிக்கலாம்.

இன்றைய சமூகச் சூழலில் பாரம்பரிய அறிவுமுறைகள் மற்றும் நவீன அறிவுமுறையின் அதிகார கட்டமைப்புக்கள் தொடர்பான மறுவாசிப்பும் தர்க்கரீதியான விவாதங்களும் மீளமைத்தல் தொடர்பான செயற்பாடுகளை முன்வைப்பதற்கான தேவையை உணர்த்தியுள்ளது. இதன் முதற்கட்டமாக பாரம்பரிய அறிவுமுறையும் நவீன வாழ்வியலும் இணைந்து செல்லும் சமகால வாழ்தலின் தேவையை உணர்த்தும் உரையாடல்கள் தொடக்கப்பட்டுள்ளன. மருத்துவிச்சி மரபினை வாழ்தலில் இணைத்தல் அங்கிகரித்தல் தொடர்பாய் யுனெஸ்கோவினால் மகப்பேறுகால மருத்துவிச்சி மரபினை உலகம் தழுவியதாய் மீளவும் வாழ்வியலில் இணைப்பதற்கான முன்மொழிவுகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

யுனெஸ்கோவினால் முன்வைக்கப்பட்ட மகப்பேறுகால மருத்துவச்சி மரபினை அங்கிகரித்தல் தொடர்பான சுற்றறிக்கையின் படி உலகில் வாழும் மக்களின் அறிவியல் மரபு என்பது பல்தன்மை வாய்ந்தது. அதில் பேறுகால மருத்துவ முறைமை என்பது பாரம்பரிய மருத்துவ முறையில் சடங்குகளுடன் இணைந்து தகவமைக்கப்பட்டுள்ளது. இதனைப் பாதுகாத்தல் நடைமுறையில் பரவலாக்கல் என்பது இன்றியமையாதது. சமாதானமான ஆரோக்கிய சமூக உருவாக்கத்திற்கும் மகப்பேறுகால மருத்துவ முறைமை வழிசமைக்கின்றது. பேறுகால மருத்துவ முறைமையை ஒரு தலைமுறையிலிருந்து இன்னொரு தலைமுறைக்கு கொண்டு செல்வது மருத்துவமுறையில் புதிய செயற்பாடுகளுக்கு வழிவகுப்பதாயும் உள்ளது. இதனைப் பரிந்துரை செய்வதன் நோக்கம். பொதுவாக மக்கள் மத்தியில் இதன் தன்மையை உணர்த்தவும், விழிப்புணர்வை ஏற்படுத்துவதும் ஆகும்.

**வாழ்வியலில் மகப்பேறுகால மருத்துவிச்சி மரபு**

இலங்கையில் தமிழர் பண்பாட்டில் பாரம்பரிய மகப்பேறுகால மருத்துவ முறைமை என்பது மாந்தரிகம், நம்பிக்கை சடங்குகளுடன் இணைந்து செயற்படும் மருத்துவமுறையாக காணப்படுகின்றது. இது பரம்பரை பரம்பரையாகவும், சுயவிருப்பின் ஆர்வத்தில் பயிலப்படுகிறது. நாட்டு வைத்தியர் மருத்துவிச்சிகளாக செயற்படுதல் என்பதற்கும் அப்பால் பிள்ளைப்பேறு பார்க்கும் பேறுகால

மருத்துவிச்சி அம்மாக்கள் கைவைத்தியர்களாக குடல் ஏற்றம், நாட்டு வைத்தியம், செய்பவர்களாக உள்ளனர். ஆண்களும் பிள்ளைப்பேறு பார்த்ததற்கான சான்றுகள் உள.
பெண் கருத்தரித்தலிருந்து தாயின் பாதுகாப்பு, குழந்தை வளர்ச்சி, குழந்தைப் பிறப்பு, பால்குடி, பால்குடி மறப்பு, வரையான காலப்பகுதி வரை தாய் சேய் பாதுகாப்பினை உறுதி செய்வதாக பேறுகால மருத்துவ முறைமை காணப்படுகின்றது. தாய் கருத்தரித்தலின் பின் குழந்தை வளர்ச்சிக்கான தாயின் பாதுகாப்பிற்கான உணவு, பழக்கவழக்கம் தொடர்பான ஆலோசனைகளை மருத்துவிச்சி அம்மாக்கள் கருத்தரித்த குடும்பத்திற்கும் பெண்ணுக்கும் வழங்குகின்றனர். ஒரு பெண் கருத்தரித்தலின் பின், அச்சூழலை குடும்பம் முழுவதும் கையாள்கின்றது. கூட்டுப்பாதுகாப்பு என்பது சாத்தியமாகின்றது. வீடு அப்பெண்ணின் பிரசவத்திற்கு தயார் ஆகின்றது. அதனை ஒழுங்கு செய்வதற்கான அறிவும் திறனும் கொண்டவர்களாக மருத்துவிச்சி மற்றும் மூத்த பெண்கள் காணப்படுகின்றனர்.


இத்தயார்படுத்தல் குழந்தையை ஆரோக்கியமாக தாய் பெற்றெடுப்பதனை நோக்காகக் கொண்டுள்ளது. குழந்தை வளர்ச்சியில் தாய், குழந்தை இருவருக்கும் ஒவ்வாமையை உண்டாக்காத உணவு முறை மற்றும் கசாயங்கள் வழங்கப்படுகின்றன. குழந்தையின் உறுப்புக்கள் வளர்தல், முடி வளர்தல் என ஒவ்வொரு மாதமும் வரையறை செய்யப்பட்டு அதற்குரிய உணவுகள் தாய்க்கு வழங்கப்படுகின்றன. வயிற்றினை தொட்டுப் பார்த்தல், நாடி பிடித்து பார்த்தல் மூலம் குழந்தையின் வளர்ச்சிநிலை, பிள்ளைப்பேறுக்காலம் போன்றவற்றை உணர்ந்து கொள்கின்றனர்.

இதன் பின்பே நோவை அதிகரிப்பதற்காகவும் நோவை தரம்பிரித்தல் ( பிள்ளைப்பேற்று நோ, வாயு நோ) என்பதற்கமைவாக கசாயங்கள் தாய்க்கு வழங்கப்படுகின்றது. அத்துடன் குழந்தை குறுக்காகக் கிடத்தல், குப்புற கிடத்தல், மாக்கொடி சுற்றினால் அதற்கானமுறையியல், இரண்டு, மூன்று குழந்தைகளை எடுப்பதற்கான முறை, இரணியப்பிள்ளையை (மரித்தபிள்ளை) தாயை பிரசவிக்க வைத்தல் தொடர்பான அறிவு என பிரசவம் சார்ந்த பூரண அறிவுகொண்டவர்களாக மருத்துவிச்சிகள் விளங்குகின்றனர்.

குழந்தை பிறந்த பின் மாக்கொடி விழாமல் நேரம் தாழ்த்தப்பட்டால் மாக்கொடியினை விழவைப்பதற்கான மந்திரங்கள் பூசாரிகளால் செய்யப்படுகின்றது. (வெற்றிலையில் மந்திரம் ஓதி மென்றிடக் கொடுத்தல்.) வைத்தியமும் மந்திரமும் இணைந்து இத்தகையான சூழ்நிலையைக் கையாள்கின்றது. மருத்துவிச்சியின் செயற்பாட்டினை பின்வரும் பிரிவுகளாகப் பார்க்கலாம்.

ஒரு பெண் கருத்தரித்த பின்னராக குழந்தையின் வளர்ச்சியை ஊக்கப்படுத்தும் செயற்பாடு, தாய் சேய் சுகப்பிரசவத்திற்கான தயார்ப்படுத்தல். பிரசவம் நடைபெறும் போது ஏற்படும் சிக்கல்களை கையாளுதல், குழந்தை பிறந்த பின்னரான குழந்தை தாய் பராமரிப்பு (பத்திய உணவு வழங்குதல்) போன்றவைகளாக இதனை பிரித்தறியலாம்.
பிள்ளைப்பேற்றுக்குப் பின்னர் தாயின் பாதுகாப்பு, சுகாதாரம், ஆரோக்கியம் போன்றவை முக்கியமானவை. தாய்க்கு பத்திய (காயம்) உணவுகள் வழங்கப்படுகின்றன. இதனை தயாரிப்பதற்கான பொருட்கள் நல்ல நாள் பார்த்து வாங்குதல், தயார் செய்தல் போன்றவை மருத்துவிச்சியினால் தயார் செய்யப்படுகின்றது.

# மகேஸ்வரி மருத்துவிச்சி



மட்டகளப்பு மாவட்டத்தில் வந்தாறுமூலை எனும் கிராமத்தில் 1947ம் ஆண்டு கார்த்திகை மாதம் 25ம் திகதி பிறந்தவர் மகேஸ்வரி மருத்துவிச்சி. இவர் தனது 16 வது வயதிலிருந்து கிராமப்புறங்களில் கர்ப்பிணி பெண்களுக்கு பிரசவம் பார்த்து வந்துள்ளார். இவர் ஒரு நாளில் 3 பெண்களுக்கும் பிரசவம் பார்த்துள்ளதாக அறியமுடிகின்றது. கர்ப்பிணி தாய்மார்களின் வலிகளை இவர் உய்த்துணர்ந்து கொள்வதாலும் பிரசவம் பார்ப்பத்தில் தேர்ச்சியுடையவராக காணப்படுகின்றார். ஒருசேவையாக இதனை செய்துவரும் இவர் 90ஆம் ஆண்டு பிரச்சினையின் போது குழந்தை கிடைத்த பெண் ஒருவரை வைத்தியசாலைக்கு கொண்டு செல்ல ஏற்பட்ட இன்னலின் காரணமாக இத்தொழிலை கைவிட தீர்மானித்ததாகவும் குறிப்பிட்டார். தற்போது இவருக்கு 76 வயதாகிறது. தனது முதுமை நிலை காரணமாக இத்தொழிலை தொடர்ந்து மேற்கொள்ள முடியாமல் சில வருடங்களிற்கு முன்பாக நிறுத்திவிட்டார். இதுவரை காலத்திலும் எந்த வித பிரச்சினையும் இன்றி தனது முழு மனதுடன் இந்த தொழிலை மேற்கொண்டு வந்துள்ளார். இவர் சுகுமாரன், பீற்றர் வைத்தியர்களுடனும் இணைந்தும் பிரசவம் பார்த்துள்ளார்.

**படம் - ப. சஷ்னி**
**தகவல் - ப. சஷ்னி, ச. சசிரேகா**

குழந்தை பெற்ற தாயின் உடலின் வலியைப் போக்கவும் இடுப்பு, கர்ப்பப்பை போன்ற பகுதிகளை பலப்படுத்தவும், தொற்று நீக்கி முறையாகவும் மீண்டும் தாயை சாதாரண வாழ்வியல் முறையில் இணைக்கவும் வேதுவார்க்கப்படுகின்றது. வேது வார்த்தல், குழந்தை பெற்று மூன்று அல்லது ஐந்து அல்லது ஏழாம் நாட்களின் பின் தொடங்குவார்கள். படிப்படியாக ஒவ்வொரு வேதும் வார்த்து மூன்று நாட்களின் பின் அடுத்த வேது வார்க்கப்படுகின்றது. முதல் வேது. பட்டைகளும் குழைகளும் சேர்ந்தது. வேப்பம்பட்டை, ஒதியம்பட்டை, வேப்பம் இலை, ஒதியம் இலை, நொச்சி இலை, ஆமணக்கு இலை, ஆடாதோடை இலை போன்றவை சேர்த்து வார்க்கப்படுகின்றது. பட்டைகளான வேப்பம் பட்டை, ஒதியம் பட்டை சேர்த்து பட்டை வேது வார்க்கப்படுகின்றது. இறுதியாக உப்பு மஞ்சள் வேது, உப்பையும் மஞ்சளையும் நீருடன் கலந்து கொதிக்க வைத்து வார்த்தல். என வேதுவார்க்கப்படுகின்றது. இவ் முறைமை பிரதேசத்திற்கு பிரதேசம் வித்தியாசங்களைக் கொண்டவை. வேது வார்த்த பின்னரே குழந்தை பெற்ற தாய் நீரினை அழையலாம். (நீரினால் குளிக்க மற்றைய தேவைகளுக்கு பயன்படுத்த தொடங்குதல்) வேது வார்க்கும் வரை சுடுநீர் மட்டுமே பாவிக்க முடியும். குழந்தைக்கு எண்ணெய் தேய்த்து வெயிலில் போடுதல், தொப்புள் கொடி விழாமல் இருந்தால் அதற்கான மருந்துகள் செய்தல் என குழந்தைப் பராமரிப்பும் மருத்துவிச்சிப் பெண்களால் பார்க்கப்படுகின்றது.

வீட்டிலுள்ள பெண்களும் ஆண்களும் பராமரிப்பு மற்றும் சடங்கு முறைகளை நன்கு அறிந்தவராக இயங்குகின்றனர். இங்கு அறிவு என்பது பெண்கள் சார்ந்ததாகவும் ஆண்களை இணைப்பதாகவும் உள்ளது. தாய், குழந்தை ஆரோக்கியத்தினைப் பேணல், பயில்வில், வாழ்வியலில் கொண்டுவருதல் என்னும் அடிப்படையில் இத்தகைய சடங்குகளும் மரபு முறைகளும் நிகழ்த்தப்படுகின்றன.

## இன்றைய வாழ்தலில் பேறுகால மருத்துவ முறைமை

நவீன அறிவியல் என்பது விஞ்ஞானரீதியாக காரணகாரிய ரீதியாக ஆய்வு கூடங்களில் பரிசோதனை செய்யப்பட்டு நிருபிக்கப்பட்டவற்றை ஒரே பொதுவான மாற்ற முடியாத உண்மையாக ஏற்றுக்கொண்டது. இவ்வாறாக உருவாக்கப்பட்டவை கருத்தியல்கள், கோட்பாடுகள் கண்டுபிடிப்புகளாக முடிந்த முடிவாய் கல்விப்புலங்களில் பரவலாக்கம் செய்யப்பட்டன. பாரம்பரிய அறிவு முறை என்பது பலநூறு வருடங்கள் வாழ்ந்த மனிதர்கள், வாழ்தலில் பெற்ற அனுபவ அறிவினை தலைமுறை தலைமுறையாக கையளித்து வருவதாகும். இது முடிந்த முடிவாக இருப்பதன்று. வாழும்சூழல் காலநிலை சார்ந்து சமூகத்திற்கு சமூகம் வித்தியாசங்களையும் வேறுபாடுகளையும் கொண்டவை. வாழ்தல் மூலம் பெற்ற அனுபவவழி சேகரித்த பாரம்பரிய அறிவு முறைகளை கற்பனையான உண்மைத்தன்மை அற்ற அறிவுமுறையாக நவீன அறிவியல் கருத்தாக்கம் செய்தது. நீண்ட தொடர்ச்சியும் அனுபவ விஞ்ஞானத்தன்மை கொண்டு விளங்கிய உள்ளூர் நிர்வாகம், அரசியல், பொருளாதாரம், மொழி, தொட்டுணராப் பண்பாட்டு வடிவங்கள், இயற்கை வேளாண்மை. கட்டுமான தொழில்நுட்ப அறிவு, உணவு முறையியல், வைத்திய முறைகள் போன்ற பாரம்பரிய அறிவுமுறைகளை காலனித்துவம் நவீனம் அளவையியல் வழி பொய்பித்தது. மறு பக்கம் நவீனப்படுத்தவும் செம்மையாக்கவும் தலைப்பட்டது. நவீன கண்டுபிடிப்புக்களை அறிவியலை பழக்கப்படுத்துவதன் வாயிலாக மரபுகளையும் அதனைப் பின்பற்றும் மக்களையும் ஒடுக்குவதும் அதிகாரப்படுத்துவதுமே இதன் நோக்காக இருந்தது. மனிதரின் வாழ்வியலிருந்து பாரம்பரிய நம்பிக்கைகள் விடுவிப்பதற்கான கருவியாக நவீன கல்விமுறை பரவலாக்கப்பட்டது.


நமது பண்பாட்டடையாளம் என்பது ஒவ்வொரு இனமும் சமூகமும் மூத்தகுடியாய் நம்மை நிருபிப்பதற்கு மாத்திரமானது மட்டுமல்ல. அது எம் வாழ்வியலில் இணைந்து பயணிப்பது. எமது வரலாற்றை தொன்மையை முன்வைப்பதற்கானதாய் பாரம்பரியம், பண்பாடு எனப் பேசுகின்றோமே தவிர இன்றைய வாழ்வியலை நேர் செய்ய காலனிய நீக்கத்திற்கான சுயமான வாழ்தலுக்கான அடிப்படைகளை இடுவதற்கான, செயற்பாடுகள் அரிதாகவே இடம்பெறுகின்றன.

மகப்பேறுகால மருத்துவ முறைமையில் மருத்துவிச்சி அம்மாக்கள் நூற்றுக்குமேற்பட்ட பிரசவங்களைப் பார்த்துள்ளனர். முப்பது தொடக்கம் நாற்பத்தைந்து வருட கால அனுபவத்தினைக் கொண்டுள்ளனர். மருத்துவிச்சி அம்மாக்கள் பிரசவம் பார்த்து ஆரோக்கியமான பிள்ளைகளாகவே எடுத்துள்ளனர் அவ்வாறு பிறந்த பிள்ளைகள் நோய்களின்றி இன்றுவரை ஆரோக்கியமாக வாழ்கின்றனர். சுகப் பிரசவத்தில் ஒவ்வொரு குழந்தையும் வெளியில்வர போராடுகின்றது. சுற்றம் சூழ அது உலகிற்கு வருகின்றது. வயிற்றை தடவி குழந்தையின் இருப்பினை அறிந்து அதற்கான தயார்படுத்தலை செய்வதன் ஊடாக மருத்துவிச்சி அக்குழந்தை வெளிவர உதவுகின்றாள். பிரசவத்தில் சிக்கல் வரும் போது பிள்ளையின் வருகையை துரிதப்படுத்த மல்லி, மிளகு, இஞ்சி வெள்ளக்காக்கண வேர், வெந்தயம். சேர்த்து அவித்து ஊறல் கொடுக்கிறாள். பிரசவத்தின் பின்னர் தாய் பிள்ளைக்குரிய பாதுகாப்பினைச் செய்கிறாள்.

இத்தகைய அறிவினை, மருத்துவிச்சிகளது அனுபவங்களை அறிவாய் பகிர்வதற்கும் கற்பதற்குமான முறைமை நமது கல்வி முறையில் இல்லை. எமது கல்வி நடவடிக்கைகள், எம் சூழல் சார்ந்த கற்றல், எமது பாரம்பரிய அறிவுப் பொறிமுறைகளை கற்பது, என்பதனை விலக்கி அவற்றினை மூடநம்பிக்கைகளாக பாமரமக்களுடையதாய் கற்பித்தது. சிறந்த அறிவியலாக வாழ்வியலாக ஐரோப்பிய வாழ்தலை அறிவியலை பண்பாட்டை ஏற்றுக்கொண்டது. ஏற்றுக்கொள்ளச் செய்கின்றது. ஐரோப்பியர் அல்லாத பிற பண்பாட்டினை வாழ்வியலை ஐரோப்பிய மையவாதம் எந்தவித தர்க்கவியல் விமர்சனமுமின்றி அறிவற்றதாய் வாழ்வியலிருந்து இல்லாமல் செய்துள்ளது. செய்தும் வருகின்றது.

காலனித்துவம் காலனிய நாடுகளில் பண்பாடு. அரசியல், பொருளாதாரம், நிர்வாகம், சார்ந்த அபிவிருத்தி மூலமான நாகரீகப்படுத்தல் என அடையாளப்படுத்திக் கொண்டது. ஆசிய ஆபிரிக்க இலத்தீன் அமெரிக்க நாடுகளை வளங்களைச் சுரண்டவும் தனக்கான உற்பத்திகளை செய்யவும் உரிய இடமாக அதிகாரப்படுத்தியது. தன் சுரண்டலுக்கும் விற்பனைக்குமான முகவர்களை காலனிய நாடுகளில் உருவாக்கியது. அதற்கான சட்டரீதியான ஒழுங்குகளைச் செய்ததோடு போக்குவரத்து வசதி, பெருந்தெருக்கள் அமைத்தல் மூலமான அபிவிருத்தி என நியாயப்படுத்தியது. உலக வளங்களை ஒரே இடத்தில் குவிப்பதே இதன் நோக்கமாக இருந்தது. இதன் வாயிலாக காலனிய ஒடுக்குதலுக்குட்பட்ட நாடுகளின் வளங்களை சுரண்டுவதன் மூலம் உலக முதலாளியம் உருப்பெற்றது..

முதலாளியத்தின் நோக்கு உற்பத்திகளை விற்பதற்கான சந்தைகளை உருவாக்குவதும் கண்டுபிடிப்பதுமே ஆகும். இவ் முதலாளியம் அதி உற்பத்திகளைச் செய்யத் தொடங்கியது. பாரம்பரிய உற்பத்தி என்பது தேவைக்கேற்ற உற்பத்தி,. உற்பத்தி செய்பவர்களுக்கும் வாங்குபவர்களுக்குமான உறவு இதில் காணப்படும்.



மட்பாண்டம் போன்ற சிறு உற்பத்திகள் பண்பாட்டுப் பொருண்மை கொண்டவைகளாகவும் இயங்குகின்றன. முதலாளியப் பாரிய உற்பத்திகள் சிறு உற்பத்திகளுக்குரிய சந்தைகளையும் தனக்கான பெரும் உற்பத்திகளுக்கான சந்தைகளாக மாற்றியுள்ளது. அத்தோடு மருத்துவமும் மனித உடலும் பெரும் முதலீட்டு உற்பத்தியாக முதலாளியத்தால் மாற்றப்பட்டுள்ளது. இன்றைய சூழலில் காலனித்துவத்தினால் அறிமுகம் செய்யப்பட்ட வைத்தியம் என்பது இலாபமீட்டும் தொழிலாக சமூகப்பரப்பில் இயங்குவதனைக்காணலாம்.

உணவும் மருத்தும் பாரம்பரிய அறிவு முறையில் பண்பாட்டில் ஒரு பகுதியாகும். நோய்களுக்கேற்ற உணவு, சடங்கிற்கு ஏற்ற உணவு. உணவு விலக்கல், உணவு சேர்த்தல் என உணவுப் பாரம்பரியம் பல்தன்மை கொண்டதாய் விளங்கியது. காலனியத்தின் பின்னான நவீன அறிவு மகப்பேறுகால மருத்துவ முறைமை மற்றும் உணவு, மருந்து அனைத்தினையும் விற்பனைக்கானதாய்; இலாபமீட்டலுக்கானதாய் மாற்றியது. நாட்டின் பிரதேசத்தின் தட்பவெப்பம் உடலின் தட்பவெப்பம் என்பன இங்கு கடந்ததாய் உலகப்பரப்பில் எல்லாம் எங்கும் எப்போதும் எல்லோருக்கும் பொதுவானது என்ற அடிப்படையில் ஒரே உணவு, ஒரே உடல் என்னும் பொதுமைக்குள் தன் பெருஞ்சந்தையை கருத்திற் கொண்டு உணவு, வைத்தியம் மருந்து போன்றவற்றை பரவலாக்கியுள்ளது.

மகப்பேற்றுக்கால மருத்துவ முறைமையில் பிரசவம் என்பது பிள்ளையைப் பெற்றெடுப்பது மாத்திரமல்ல. அது சடங்குகளுடன் இணைந்தது. ஆரோக்கியமான சமாதானமான இளம் தலைமுறைகளை உலகிற்கு கொண்டுவருவது. இனப்பெருக்கம் சார்ந்த ஆரோக்கியத் தன்மையையும் பேணுவது.

ஆனால் நவீன காலனிய அறிவில் வைத்தியம் ஒற்றைத் தன்மை கொண்டதாகவே உடல்களைக் கணிக்கின்றது.

மகப்பேற்றுக்கால மருத்துவிச்சிகள் நீண்ட அனுபவத்தினையும் முதிர்ச்சியையும் கொண்டவர்களாக காணப்படுகின்றனர். ஆனால் மகப்பேற்றில் மருத்துவிச்சிகளுக்கு இருந்த அறிவு அனுபவம் போன்றவை கருத்தில் கொள்ளப்படாமலும் பொதுத்தளத்தில் விவாதிக்கப்படாமலும் நவீன வைத்திய அறிவியல் முறை குடும்பநல உத்தியோகத்தர்களுக்கான (Midwife) பயிற்சிகளையும் கத்தரிக்கோல், துடிப்புபார்க்கும் கருவி, மகப்பேறு பார்க்க உதவும் கையேடு, பிளைட் போன்ற கருவிகளையும் வழங்கியது.

தூய்மையான, அன்பான, ஆதரவான கைகளைக் கொண்டு பிள்ளைப்பேறு பார்த்தவர்களுக்கு கைகளை விட கருவிகள் சுகாதாரமானவை என கருவிகளை பயன்படுத்த பயிற்றுவிக்கப்பட்டனர். வீட்டில் பார்க்கப்படும் பேறுகால மருத்துவ முறைமை சுகாதாரமற்றவை, பாதுகாப்பற்றவை தாய்,சேய் இறப்புவீதத்தினை அதிகரிக்கச் செய்பவை போன்ற பரப்புரைகள் அறிவுப்புலங்களில் வாதிடப்பட்டு பேறுகால மருத்துவ முறைமை என்பது சட்டரீதியான அங்கிகாரம் இழக்கப்பட்டு தண்டணைக்குரிய குற்றமாக்கப்பட்டது. இன்றைய சட்டஒழுங்கின் பிரகாரம் வீட்டில் பிறக்கும் பிள்ளைகளுக்கு பிறப்பு அத்தாட்சி பத்திரம் பதிவு செய்ய முடியாத சட்ட வரையறைகள் விதிக்கப்பட்டுள்ளன.

இத்தகைய சட்ட நடவடிக்கைகளும் பயிற்சிகளும் மகப்பேற்றுக்கால மருத்துவிச்சி முறைமைகளை வாழ்விலிருந்து விலக்குவதற்கான கருத்தியலை கட்டமைத்தது..

இதன் பின்னான காலங்களில் மக்களுக்கும் மருத்துவிச்சிகளுக்கும் மகப்பேறு என்பது அச்சம் தருவதாய் வீட்டுச் சூழலில் கையாளப்பட முடியாத ஒன்றாய் நவீனகல்வி பதிவு செய்தது. இதன் தொடர்ச்சியாய் குடும்பநல உத்தியோகத்தர்கள் என்னும் முறை உருவாக்கப்பட்டதுடன் பிணி ஆய்வு நிலையங்களும் (HEALTH CARE CENTRE) உருவாக்கப்பட்டன.

குடும்பநல உத்தியோகத்தர்களுக்கான கடமைகளாகக் குறிப்பாக சமுகத்திலுள்ள பெண்கள் திருமணம் முடித்ததிலிருந்து ஆரம்பிக்கின்றது. திருமணம் முடித்தவுடனே குறித்த ஆணுக்கும் பெண்ணுக்கும் கர்ப்பத்திற்கு முன்னான ஆயத்தநிலைகளை மேற்கொள்வதற்கான உடல் உள தயார்படுத்தல்கள் பரிந்துரை செய்யப்படும். இதனை கர்ப்பத்திற்கு முன்னான பிணி ஆய்வு கல்வி எனக் கூறுவர். பின்னர் குறித்த பெண்ணுக்கு போலிக் அசிட் மாத்திரை வழங்கப்படும் கர்ப்பந்தரித்ததிலிருந்து தாய்மார்களுக்கான கல்சியம், அயன், போன்ற மாத்திரைகள் வழங்கல். அத்துடன் மாதாந்த பிள்ளை வளர்ச்சியை அறிவதற்கான பரிசோதனைகள், தாயின் ஆரோக்கியத்தைக் கணிப்பிடல், உணவுகள் தொடர்பான ஆலோசனைகளை வழங்கல். குழந்தைகளுக்கான தடுப்பூசி என பிணி ஆய்வு நிலையங்கள் மூலம் குடும்பநல உத்தியோகத்தர்கள் இயங்கி வருகின்றனர்.

பாரம்பரிய மகப்பேற்று மருத்துவிச்சி முறைமை என்பது உணவினை மருந்தாக்கியது. பல்தன்மையான உடல்களும் அதற்கான மருத்துவமும் உருவாக்கப்பட்டன. நவீன மருத்துவத்தில் எல்லா உடல்களும் ஒற்றைத் தன்மையானவை. உலகப்பொதுமையில் ஒரே மருந்து என்பதனை நடைமுறைப்படுத்தியதுடன் மூன்றாம் உலக நாடுகளின் உடல்கள் பரிசோதனைக் கூடங்களாகவும் மாற்றப்பட்டுள்ளது. மருத்துவிச்சிகளுக்குப் பதிலாய் குழந்தைப் பேற்று வைத்தியர் முன்னுரிமை பெறத் தொடங்கினார். குடும்பமும் மருத்துவிச்சியும் அடிப்படையாகக் கொண்டு இயங்கி வந்த பேறுகால மருத்துவ முறைமை நிறுவக மயப்பட்டு வியாபாரமாக்கப்பட்டது. காலனித்துவத்தின் வெற்றியாய் மருத்துவிச்சிகளுக்கு வழங்கப்பட்ட பயிற்சிகள், அவர்களே அவர்களின் மீதான நம்பிக்கையை இழக்கச் செய்துள்ளதுடன் பேறுகால மருத்துவ முறைமை மீது அச்சத்தினை ஏற்படுத்தியமை தெளிவாகின்றது.

தங்களது நீண்ட கால அனுபவத்தினை சமூகத்தளத்தில் பயன்படுத்த முடியாதவர்களாய் நவீன வைத்தியத்தினை விமர்சிக்கவோ தங்களது அனுபவங்களை அறிவினை சட்டரீதியாக பதிவு செய்ய முடியாதவர்களாய் மகப்பேற்று மருத்துவிச்சிகள் ஓரங்கட்டப்பட்டுள்ளனர். தங்களது பாரம்பரிய அறிவினை நினைவிற்கொண்டு பேசுபவர்களாகவே மாத்திரமே அவர்களை அதிநவீன வைத்திய முறை மாற்றியுள்ளது.

எங்களுக்கான வைத்தியமுறை எது? என்னும் எந்தவித தர்க்க விவாதங்கள் இல்லாமல் காலனியம் அறிமுகம் செய்த நவீன மருத்துவத்தினை ஏற்றுக் கொண்டுள்ளோம். இதற்கான மூளைச் சலவையை காலனிய கல்விமுறை செய்துள்ளது. செய்தும் வருகிறது. காலனித்துவத்திற்கு மாற்றாய் காலனியத்திலிருந்து விடுபடுவதற்கான வழிமுறையாக மரபினை தேடுதல், மரபிற்கு திரும்புதல் போன்ற உரையாடல்களை. செயற்பாடுகளை எங்கிருந்து உருவாக்கப் போகின்றோம். என்னும் கேள்வியும் கருத்துரைப் பகிர்வுகளும் இன்றைய சூழலில்

மிக முக்கியமான தேவையாக உணரப்பட வேண்டியது.

கலாநிதி சி.ஜெயசங்கர்,

கலாவதி கலைமகள்,

நிறோசினி மகேந்திரன்,

சிந்துஉஷா விஜேந்திரன்

,து.கௌரீஸ்வரன்.

## கிளிவெட்டி ஆற்றுமீன் சமையல்



எழில் கொஞ்சும் அழகின் திருகோணமலை மாவட்டத்திலுள்ள மருத நிலப்பிரதேசமாக உள்ள கிளிவெட்டி கிராமத்தினை மகாவலி கங்கையின் கிளை ஆறுகளில் ஒன்றான கிளிவெட்டி ஆறு ஊடறுத்து செல்கின்றது. இக்கிராம மக்கள் கிளிவெட்டி ஆற்றுநீரைக் கொண்டு தமது வாழ்வாதாரமாக விவசாயத்தினை மேற்கொள்கின்றார்கள். மேலும் தமது வாழ்வாதரத்தினை நகர்த்திச் செல்வதற்கு பயிர்ச்செய்கை மற்றும் மந்தை வளர்ப்பினையும் மேற்கொள்கின்றார்கள். இக்கிளிவெட்டி ஆற்றிலே பலவகையான மீன்கள் காணப்படுகின்றன. இக்கிராம மக்கள் அந்த மீன்களை பிடித்து தமது உணவிலே சேர்த்துக் கொள்கின்றார்கள். இவ்வாற்றில் விரால்மீன், யாவான், சுங்கான், மசறி, கெழுத்தி, பறவமீன், செங்கணயான், கணயான், கொக்குச்சான், பொட்டியான், ஜப்பான், கோல்டன்மீன், விலாங்குமீன் மற்றும் மோட்டுஇறால் போன்ற மீன்கள் காணப்படுகின்றன. இம்மீன்களில் விரால், மசறி, சுங்கான், விலாங்கு, யாவான் போன்ற மீன்களின் தோலினை நீக்கிய பின்னரே அதாவது அவற்றின் தோலினை உரித்த பின்புதான் சமைப்பார்கள்.

இம்மீன்களை நாளாந்தம் பாலூட்டும் தாய்மார்கள், சிறுவர்கள், முதியோர்கள் தமது உணவுமுறையில் கட்டாயம் சேர்த்துக் கொள்ள வேண்டும் என வைத்தியர்கள் பரிந்துரைக்கின்றார்கள். இம்மீன்களை எவ்வாறு சமைக்க வேண்டும் என்று பார்ப்போமானால் மீன்களை வெட்டி எடுத்து உப்பும் மஞ்சளும் இட்டு மூன்று அல்லது நான்கு தடவைகள் நன்னீரில் கழுவ வேண்டும்.

ஆற்றுமீன்கள் எல்லாவற்றையுமே இவ்வாறு சுத்தமாக கழுவி எடுத்த பின்புதான் சமைக்க ஆரம்பிப்பார்கள். கர்ப்பிணித் தாய்மார்கள், பாலூட்டும் தாய்மார்கள், குழந்தைகள், முதியோர்கள் போன்றவர்களுக்கு இம்மீன்களை சமைக்கும் முறைகள் வேறுபடுகின்றன.

அந்த வகையிலே, கர்ப்பிணித்தாய்மார்களுக்கும், பாலூட்டும் தாய்மார்களுக்கும் இக்கிளிவெட்டி ஆற்றுமீனினை அரைத்து சமைப்பார்கள். அதாவது இதனை தண்ணிக்கறி என்றும் கூறுவார்கள். சுங்கான், விரால், மசறி, ஜப்பான்(செப்பலிமீன்), கோல்டன் போன்ற மீன்களை இவ்வாறு அரைத்து சமைக்க இக்கிளிவெட்டி கிராம மக்கள் பயன்படுத்துகின்றார்கள்.

எனவே இம்மீன்களை சுத்தமாக கழுவி எடுத்த பின்பு அரைப்பதற்கு தேவையான பொருட்களான மிளகு, கொத்தமல்லி, மஞ்சள், சீரகம், பெருஞ்சீரகம் போன்ற மசாலா பொருட்களை சிறியளவு எடுத்துக் கொண்டு அவற்றோடு தேங்காய், காய்ந்த மிளகாய் (செத்தல்), வெள்ளைப்பூண்டு (உள்ளி), போன்றவற்றை நெருப்பில் வாட்டி அல்லது சுட்டெடுத்து இவை அனைத்தையும் அம்மியில் நன்றாக அரைத்தெடுத்த பின்பு அதனோடு மீனினை சேர்த்து, சிறிதளவு நீரும் சேர்த்து நன்றாக கலக்கி விட்டு மண் சட்டியில் இட்டு அடுப்பில் வைத்து சமைத்தெடுப்பார்கள்.

இதற்கு தேவையான அளவு உப்பும், சிறிதளவு வெங்காயமும், கருவேப்பிலையும் அடுப்பிலிருந்து சட்டியை எடுக்க முன்பு சேர்க்க வேண்டும். இவ்வாறு பாலூட்டும் தாய்மார்களுக்கு மிளகுத்தண்ணி கறியாக சமைத்து கொடுப்பார்கள்.

அடுத்து வயதானவர்களுக்கும், நோய் ஏற்பட்டவர்களுக்கும் ஆற்றுமீனினை தண்ணிக்கறி சமைத்து கொடுப்பார்கள். தண்ணிக்கறி சமைப்பதற்கு முதலில் சுத்தம் செய்து வைத்துள்ள மீனுடன் உப்பு சேர்த்து மண்சட்டியில் வைத்துக் கொள்வார்கள். பின்னர் மிளகு, கொத்தமல்லி, மஞ்சள், சின்னசீரகம், பெரியசீரகம், கொறுக்காய்புளி, அல்லது பழப்புளி சேர்த்து செத்தல், வெள்ளைப்பூடுகளை நெருப்பில் சுட்டெடுத்து மேலே கூறிய மசாலா பொருட்களுடன் சுட்டெடுத்தவற்றை சேர்த்து அம்மியில் அரைத்தெடுத்துக் கொண்டு, அரைத்தவற்றுடன் மீனை சேர்த்து தண்ணீர் விட்டு அடுப்பில் சமைத்தெடுப்பார்கள். கறியை இறக்கி எடுத்ததும் வெங்காயம், கருவேப்பிலை சேர்ப்பார்கள். இவ்வாறு நோய் ஏற்பட்டவர்களுக்கும், முதியோர்களுக்கும், சிறியவர்களுக்கும் கொடுப்பார்கள்.



கிளிவெட்டி ஆற்றுமீனினை தீயல் குழம்பும் வைப்பார்கள், அந்தவகையிலே மீனை வெட்டி கழுவி சுத்தம் செய்து கழுவி எடுத்த பின்பு உப்பும், மஞ்சளும், பழப்புளியும், வீட்டிலேயே அரைத்தெடுத்த மிளகாய்த்தூளினை தேவையான அளவு சேர்த்து கலக்கி வைத்துவிட்டு அடுப்பிலே சட்டியை வைத்து சிறிதளவு எண்ணெய் விட்டு வெங்காயம், நறுக்கிய தக்காளிப்பழம், சீரகம், கருவேப்பிலை இட்டு தாளித்தெடுத்த பின்பு மசாலா சேர்த்து வைத்த மீனினை சேர்த்து தேவையான அளவு பாலினை சேர்த்து வேகவிடுவார்கள்




நன்கு வெந்தபின் மிளகும், வெள்ளைப்பூண்டும் சேர்த்து அரைத்தெடுத்ததனையும் சேர்த்து 5 நிமிடம் நன்றாக வத்தவிட்டு மீன்தீயல் குழம்பு வைப்பார்கள். இதனை சிறுவர்கள், பெரியோர், இடைப்பட்ட வயதினர் என அனைவருமே விரும்பி உண்பார்கள். இதே சமையல் முறையில் தேங்காய்பால் அதிகம் வற்றாமல் குழம்பு இருக்கும் வகையில் மீன்குழம்பும் வைப்பார்கள். அத்தோடு இதே சமையல் முறையோடு வீட்டிலரைத்த மிளகாய் தூளிற்கு பதிலாக தனித்தூளினை தாளித்த எண்ணெயில் சேர்த்து பின்பு மீனை சேர்த்து சமைத்தெடுப்பார்கள்.

சிறுவர்கள் காரம் அதிகம் சாப்பிட மாட்டார்கள் என்பதனால் சிறுவர்களுக்கும், குழந்தைகளுக்கும் கிளிவெட்டி ஆற்று மீனினை பொரித்தும், மீன்சொதியும் வைத்துக் கொடுப்பார்கள். அந்த வகையிலே சொதி வைப்பதற்கு சுத்தம் செய்து கழுவி எடுத்த மீனோடு உப்பும், சிறிதளவு மஞ்சளும் இட்டு, தேவைகேற்ப பச்சை மிளகாயும் சேர்த்து சிறிதளவு நீரும் சேர்த்து வேகவிடுவார்கள். அவித்த பின்பு தேங்காய்பால் சேர்த்து அதனோடு வெங்காயமும், கருவேப்பிலையும் சேர்த்து தலைப்பாலை (முதலாம்பால்) விட்டு கொதித்ததும் இறக்கி எடுத்து தேசிப்புளியை தேவைக்கேற்ப சேர்ப்பார்கள். அத்தோடு அனைத்து ஆற்றுமீனையும் பொரித்தெடுப்பார்கள். பொரிப்பதற்கு சுத்தம் செய்தெடுத்த மீனுடன் உப்புத்தூள், மஞ்சள்தூள், சிறிதளவு மிளகாய்த்தூள் சேர்த்து கலக்கி வைத்து 5 நிமிடங்களின் பின்பு

பொரித்தெடுப்பார்கள். இந்த முறையோடு சிலர் இஞ்சி, வெள்ளைப்பூண்டை அரைத்து மீனோடு சேர்த்து சிறிதளவு புளியும் இட்டு ஊறவைத்தெடுத்த பின்புதான் பொரிப்பார்கள்.

கடல் மீனான நெத்தலிமீனை சமைப்பது போன்று பெட்டியான் மீன் குஞ்சுகளை சம்பல் சேர்த்து நன்கு அலசி கழுவி எடுத்த பின்பு அதனோடு மஞ்சள்தூள், உப்புசேர்த்து கலக்கி வைத்துவிட்டு வெங்காயம், நறுக்கிய தக்காளிப்பழம், சீரகம், கருவேப்பிலை போன்றவற்றை சிறிதளவு எண்ணெய் சேர்த்து நன்றாக தாளித்தெடுத்த பின்பு அதனோடு தேங்காயை அம்மியில் வைத்து பட்டாக அரைத்தெடுத்து தாளித்ததோடு சேர்ப்பார்கள்.

மிளகாய்த்தூளையும் சேர்பார்கள். அந்த கூட்டிற்கு தேவைக்கேற்ப உப்பும் சேர்த்து அது கொதிக்கும் போது ஊறவைத்த மீனை அதனுடன் சேர்த்து 5 நிமிடம் மீனை வேகவிட்டு இறக்கி எடுப்பார்கள். இது சிறியமீன் என்பதனால் இறக்குவதற்கு முன்புதான் சேர்ப்பார்கள். இவ்வாறு கிளிவெட்டி கிராம மக்கள் கிளிவெட்டி ஆற்று மீனினை சமைக்கின்றார்கள்.

ஸ்ரீனிவாசன் டிலானி

கிளிவெட்டி







